www.rejinpaul.com

# மேல்நிலை முதலாம் ஆண்டு

## கணக்குப் பதிவியல்

## (தொழிற்பிரிவு)

## மாதிரி வினாத்தாள்

**நேரம் : 2½ மணி** **மதிப்பெண் : 90**

**பகுதி – I** **15 x 1 = 15**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.**

1. இரட்டை பதிவு தன்மைப்படி ஒவ்வொரு நடவடிக்கையும் -------- தன்மை கொண்டது

   அ) மூன்று தன்மை ஆ) ஒரு தன்மை இ) இரண்டு தன்மை

2. நடவடிக்கைக்கு ஆதரமாக இருப்பது, எழுத்தில் ஆவணமாக உள்ள நடவடிக்கைக்கு

   அ) ரசீது ஆ) பற்று குறிப்பு இ) சான்று சீட்டு

3. பின்வருவதில் எது சரியானது

   அ) முதல் = சொத்து + பொறுப்புக்கள் ஆ) முதல் = சொத்து – பொறுப்புகள்

   இ) சொத்துக்கள் = முதல் + பொறுப்புகள்

4. சீனிவாசனுக்கு விற்ற சரக்கு, வரவு வைக்க வேண்டியது

   அ) ரொக்க கணக்கு ஆ) சீனிவாசன் கணக்கு இ) விற்பனை கணக்கு

5. ரொக்க புத்தகத்தின் இருப்பு சுட்டிக் காட்டுவது

   அ) நிகர வருமானம் ஆ) கை ரொக்கம்

   இ) கடனாளிக்கும், கடனீந்தோருக்கும் உள்ள வேறுபாடு

6. நடப்பு பொறுப்பு, இருப்பு நிலை குறிப்பில் பதியப்படுவது

   அ) சொத்துக்கள் பக்கம் ஆ) பொறுப்புகள் பக்கம் இ) பதியத்தேவையில்லை

7. முதல் என்பது ----------

   அ) வருமானம் ஆ) சொத்து இ) பொறுப்பு

8. குறிப்பேட்டு பதிவுகளை பதிவு செய்வது ----------

9. இயந்திரம் – இது எடுத்துக்காட்டாக கருதப்படுவது ---------- கணக்கு

10. (L.F.) பே.ப.எண். எப்போது நிரப்பப்பட வேண்டும் ----------

11. இருப்பு நிலை குறிப்பு ---------- வியாபாரத்தின் நிலைமையைக் காட்டுளளகிறது.

www.rejinpaul.com

12. நிகர லாபம் எதனுடன் கூட்டப்பட வேண்டும் ---------------

13. சொத்து மதிப்பு ரூ.2,00,000. இதை ரூ.1,50,000 விற்பனை செய்தால் முதலின நட்டம் ரூ.------------

அ) ரூ.50,000 ஆ) ரூ.1,50,000 இ) ரூ.2,00,000

14. மேலாளருக்கு வழங்கிய ஊதியம் பற்று வைக்க வேண்டியது

அ) மேலாளர் கணக்கு ஆ) அலுவலக செலவு கணக்கு

இ) ஊதிய கணக்கு

15. அனாமத்து கணக்கு வரவு இருப்பு காண்பிக்க வேண்டியது

அ) இலாப நட்டக் கணக்கில் வரவு வைக்க வேண்டும்

ஆ) இ.நி.கு. பொறுப்புக்கள் பக்கம் காட்ட வேண்டும்

இ) இ.நி.கு. சொத்துக்கள் பக்கம் காட்ட வேண்டும்.

பகுதி – II 10 x 3 = 30

**ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும், அவற்றில் வினா எண். 16க்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

16. கணக்கு பதிவியல் வரைவிலக்கணம் தருக

17. இரட்டைப் பதிவு முறை விளக்கம் தருக

18. குறிப்பேட்டுப் பதிவு தருக

சென்ற ஆண்டு வராக்கடன் தொகை ரூ.5,000 பெற்றது

19. இடாப்பு என்றால் என்ன ?

20. பேரேட்டு கணக்கின் பயன்கள் யாவை ?

21. விற்பனை பேரேடு தயாரிக்க.

| | |
|---|---|
| 2014 ஜுன் 5 | கோவிந்துக்கு கடனாக விற்றது ரூ.10,000 |
| 2014 ஜுன் 7 | பாஸ்கர் & கோ–விற்கு கடனாக விற்றது ரூ.15,000 |
| 2014 ஜுன் 8 | ரவிக்கு செய்யப்பட்ட ரொக்க விற்பனை ரூ.28,000 |
| 2014 ஜுன் 10 | அன்புக்கு கடனாக விற்ற சரக்கு ரூ.50,000 |

22. எதிரெதிர் பதிவு என்றால் என்ன ?

23. முன் வைப்புத் தொகை என்பது பற்றி நீ அறிவது யாது ?

24. சில்லரை ரொக்க ஏட்டின் பயன்கள் யாவை ?

25. வங்கி சரிகட்டும் பட்டியல் என்றால் என்ன ?

26. வங்கி சரிகட்டும் பட்டியல் தயாரிக்கவும்.

அ) ரொக்க ஏட்டின்படி வங்கி இருப்பு ரூ.1,500

ஆ) காசோலை முன்னிலைப்படுத்தியும் வசூலாகாதது ரூ.200

இ) காசோலை வழங்கியது. ஆனால் இதுவரை வங்கியில் செலுத்தவில்லை ரூ.500

ஈ) வட்டி வழங்கியது ரூ.50

27. திரு. முத்துவின் வியாபாரக் கணக்கு தயாரிக்கவும்.

தொடக்க சரக்கு ரூ.500 கொள்முதல் ரூ.5,000

விற்பனை ரூ.10,000 இறுதிச் சரக்கு ரூ.3,000

28. விதித் தவறு. விளக்கம் தருக.

## பகுதி – III 5 x 5 = 25

**ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக. வினா எண்.28–ற்கு கட்டாயம் விடையளிக்கவும்.**

29. கணக்கு பதிவியலின் பொன்னான விதிகளை கூறுக

30. கீழ்க்காணும் தொடக்கப் பதிவிற்கு குறிப்பேட்டு பதிவு தருக.

கை ரொக்கம் ரூ.2,000 இயந்திரம் ரூ.50,000

அரைகலன் ரூ.5,000 கடனாளிகள் ரூ.20,000

கடனீந்தோர் ரூ.15,000

31. மாற்றுச்சீட்டு வரைவிலக்கணம் தருக– மாதிரிப் படிவம் தருக.

32. பல்வகையான ரொக்க புத்தகங்களை விளக்குக.

33. திருமதி.அமுதாவின் நடவடிக்கைகளிலிருந்து சில்லரை ரொக்க ஏடு தயாரிக்க

| | | ரூ. |
|---|---|---|
| 2015 டிசம்பர். 1 | கை ரொக்கம் | 1,000 |
| 2015 டிசம்பர். 2 | காசாளரிடமிருந்து பெற்றது | 4,000 |
| 2015 டிசம்பர்..4. | தபால் தலை வாங்கியது | 100 |
| 2015 டிசம்பர். 5. | எழுதுபொருள் வாங்கியது | 250 |
| 2015 டிசம்பர். 8. | கோவிந்துக்கு செலுத்தியது | 450 |
| 2015 டிசம்பர். 10. | தேநீர் செலவு | 75 |
| 2015 டிசம்பர். 12. | எழுதுபொருள் வாங்கியது | 125 |
| 2015 டிசம்பர். 15. | பதிவு தபால் செலுத்தியது | 100 |
| 2015 டிசம்பர். 20 | பயணச் செலவு | 120 |
| 2015 டிசம்பர். 25 | மின் கட்டணம் செலுத்தியது | 350 |

34. கீழ்க்காணும் விபரங்களிலிருந்து இருப்பாய்வினை 31.12.2010 தயாரிக்க

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| முதல் | 5,00,000 | கொள்முதல் | 1,00,000 |
| கடனீந்தோர் | 15,000 | விற்பனை திருப்பம் | 2,000 |
| விற்பனை | 2,10,000 | உள் ஏற்றி செல் செலவு | 5,000 |
| பெ.மா.சீட்டு | 20,000 | கூலி | 8,000 |
| கடனாளிகள் | 25,000 | இயந்திரம் | 5,000 |
| நிலம் | 2,50,000 | வாடகை செலுத்தியது | 2,500 |
| கழிவு பெற்றது | 2,000 | வட்டி பெற்றது | 2,000 |

35. இலாப நட்டக் கணக்கினை திருமதி.சாந்தியின் இருப்பாய்விலிருந்து மார்ச் 31, 2014 தயாரிக்கவும்

| | ரூ. | | ரூ. |
|---|---|---|---|
| மொத்த லாபம் | 2,50,000 | தள்ளுபடி வழங்கியது | 1,200 |
| சம்பளம் | 30,000 | தள்ளுபடி பெற்றது | 3,000 |
| வாடகை செலுத்தியது | 10,000 | வட்டி செலுத்தியது | 8,000 |
| வெளி ஏற்றிச் செல் செலவு | 2,000 | கழிவு பெற்றது | 10,000 |
| விற்பனை செலவு | 1,000 | | |

www.rejinpaul.com

## பகுதி – IV 2 x 10 = 20

36. திருமதி.சுதா அவர்களின் இருப்பாய்விலிருந்து மார்ச் 31, 2012–ஆம் ஆண்டுக்கு இறுதி கணக்கை தயாரிக்க

| விபரம் | பற்று ரூ. | விபரம் | வரவு ரூ. |
|---|---|---|---|
| தொடக்க சரக்கு | 12,500 | விற்பனை | 1,89,000 |
| தேய்மானம் | 7,000 | கழிவு | 2,000 |
| வெளி ஏற்றி செல் செலவு | 500 | முதல் | 1,71,300 |
| உள் ஏற்றி செல் செலவு | 600 | கடனீந்தோல் | 17,500 |
| அரைகலன் | 8,000 | செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு | 5,000 |
| இயந்திரம் | 2,00,000 | கொள்முதல் திருப்பம் | 13,800 |
| சம்பளம் | 7,500 | | |
| கடனாளிகள் | 19,000 | | |
| தள்ளுபடி | 1,500 | | |
| பெ.மா.சீட்டு | 17,000 | | |
| கூலி | 16,000 | | |
| விற்பனை திருப்பம் | 14,000 | | |
| கொள்முதல் | 86,000 | | |
| | 3,98,600 | | 3,98,600 |

இறுதிச் சரக்கு மார்ச் 3, 2012 ரூ.45,000

(அல்லது)

கீழ்க்காணும் விவரங்களிலிருந்து திரு.டேவிட் அவர்களின் வங்கி சரிகட்டும் பட்டியலை தயாரிக்க டிசம்பர் 31, 2013

அ) வங்கி இருப்பு ரொக்க ஏட்டின்படி ரூ.1,500

ஆ) காசோலை விடுத்தது, ஆனால் பணமாக்கவில்லை ரூ.1,750

இ) காசோலை வங்கியில் செலுத்தியும், வசூல் ஆகாதது ரூ.2,000

ஈ) முதலீடு மீது வட்டி ரூ.5,000 வங்கி வசூலித்து வரவு வைத்துள்ளது, ஆனால் ரொக்க ஏட்டில் பதிவு இல்லை

உ) உள்ளூர் காசோலை வங்கியில் செலுத்தியது ரூ.1,000, ஆனால் ரொக்க ஏட்டில் பதிவு இல்லை

ஊ) வங்கி கட்டணம் செல்லேட்டின்படி ரூ.95

செல்லேட்டின்படி இருப்பை கண்டுபிடிக்க

www.rejinpaul.com

37. திருமதி. ஈஸ்வரியின் ஏட்டில் இருபத்தி ரொக்க ஏட்டை தயாரிக்க/

| | |
|---|---|
| 2014 ஜூன் 1 | கை ரொக்கம் ரூ.50,000. வங்கி இருப்பு ரூ.15,000 |
| 2014 ஜூன் 3 | வங்கியில் செலுத்தியது ரூ.40,000 |
| 2014 ஜூன் 6 | ரொக்கத்திற்கு சரக்கு வங்கியது ரூ.15,000 |
| 2014 ஜூன் 8 | சரக்கு ரொக்க விற்பனை ரூ.25,000 |
| 2014 ஜூன் 10 | வங்கியிலிருந்து எடுத்தது ரூ.10,000 |
| 2014 ஜூன் 15 | வாடகை காசோலை மூலம் செலுத்திய ரூ.5,000 |
| 2014 ஜூன் 17 | சம்பளம் வழங்கியது ரூ.5,800 |
| 2014 ஜூன் 20 | காசோலை மூலம் மின் கட்டணம் செலுத்தியது ரூ.3,000 |
| 2014 ஜூன் 21 | மோகனுக்கு செலுத்தியது ரூ.50,000 |
| 2014 ஜூன் 25 | செல்லேட்டின்படி வங்கி கட்டணம் ரூ.200 |
| 2014 ஜூன் 30 | ரூ.5,000 ரொக்கம் வைத்துக் கொண்டு இருப்புத் தொகையில் மீதியை வங்கியில் செலுத்தியது |

(அல்லது)

திரு.பாலன் அவர்களின் 2012 மார்ச் 31–ஆம் ஆண்டிற்குரிய இருப்பாய்வினை தயாரிக்க

| விபரம் | ரூ. | விபரம் | ரூ. |
|---|---|---|---|
| முதல் | 4,20,000 | சம்பளம் | 28,000 |
| கட்டிடம் | 1,50,000 | வாடகை | 48,000 |
| இயந்திரம் | 50,000 | கழிவு செலுத்தியது | 8,000 |
| அறைகலன் | 2,00,000 | வரி & வீதங்கள் | 3,000 |
| கார் | 2,80,000 | வாராக்கடன் | 6,000 |
| தொடக்க சரக்கு | 1,00,000 | காப்பீடு | 7,000 |
| கொள்முதல் | 1,45,000 | பொதுச் செலவுகள் | 10,000 |
| விற்பனை | 2,16,000 | கடனீந்தோர் | 70,000 |
| கடனாளிகள் | 10,000 | | |
| கை ரொக்கம் | 25,000 | | |
| வங்கி ரொக்கம் | 20,000 | | |